12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

15. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் நாற்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

16. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

17. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் அவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

18. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

8. 2016–2017 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)